

எஸ்.ஐ.ஆர். முறைகேடுகளைக் கண்டித்து, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி நாடு முழுவதும் காக்ரோச் ஜனதா பார்ட்டி (CJP) சார்பாக நடைபெறும் இளைஞர்களின் போராட்டத்திற்கு தமிழ்நாட்டில் அரசு அனுமதி வழங்க மறுப்பதை அடுத்து அந்த இளைஞர்கள் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் கண்களில் கருப்புத் துணி கட்டி உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் கோவை மாநகர மாவட்டக் கழகச் செயலாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன், சிவானந்தா காலனி பகுதிச் செயலாளர் டெம்போ சிவா, அலுவலக பொறுப்பாளர் பூபாலன், பிரின்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஜல்லடையான்பேட்டை கிளைக் கழக இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர்

எம்.கருணாநிதி (எ) நீதி - கே.ராஜலட்சுமி இணையரின் புதுமனை புகுவிழா!

முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்!

சென்னை, அக். 15 -

சென்னை அசோக் நகர் புதூர் முன்னாள் தலைவர் நினைவில் வாழும் டி.மாரியப்பன் (பி.டி.சி.) மோகனாம்பாள் ஆகியோரின் இளைய மகனும் ஜல்லடியான்பேட்டை கிளைக் கழக இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளருமான எம்.கருணாநிதி என்கிற நீதி - திருமதி கே.ராஜலட்சுமி இணையர் மேடவாக்கம் டாக்டர் அம்பேத்கர் நகர் சேரன் தெருவில் புதிதாக கட்டியுள்ள புதுமனை புகுவிழா (18.10.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 7 மணி அளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முன்னாள் அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளருமான மா. சுப்பிரமணியன், திருமதி எஸ். காஞ்சனா ஆகியோர் கலந்து கொண்டு புதிய இல்லத்தினை திறந்து வைத்து வாழ்த்துகின்றனர்.

மேலும் இவ்விழாவில் காவல் உதவி ஆய்வாளர் ஆர்.குமார், கே.அமுதா, ஆர். சோனியா, டி.தாஸ், டி. நகோமி, வி.லில்லி, எஸ். நடராஜன், என்.ராமலட்சுமி, எம்.வெங்கடேசன், வி.ஜெயா, இ.மதிவாணன், எம். லலிதா, டி.ராதா, ஆர். மாலா, பி. செல்வக்குமார், எஸ்.மீனாட்சி, என்.எம்.செந்தில்குமார், எஸ்.அமுதா, ஆர். யுவராஜ், ஒய்.தேவி, என்.எம்.ரமேஷ், ஆர். உமாதேவி, கே. தமிழரசி, கே.தருண் மற்றும் கழக நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மு.பெ.சாமிநாதன் – வி.சி.சந்திரகுமார் – இசை முன்னிலை!

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!



கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல. பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருப்பூர், அக்.15-

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் இன்று (15.10.2026 - வியாழக்கிழமை) மாலை 04.30 மணியளவில் பொள்ளாச்சி ரோடு, தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் எனது (மாவட்டக் கழக செயலாளர் இல. பத்மநாபன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் இசை முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம், திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

ஒன்றிய, நகர பேரூர் கிளை கழகங்கள் மறுசீரமைப்பு - குறித்து

கழக ஆக்கப்பணிகள் - தொடர்பாக.

இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் 15 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!

சென்னை வானிலை மையம் தகவல்!

சென்னை, அக்.15-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு:

தென்மேற்குப் பருவமழை நாட்டின் மீதமுள்ள பகுதிகளிலிருந்து இன்று (அக்.15) முழுவதுமாக விலகுவதற்கான சூழல் உருவாகி வருகிறது. அதே நேரத்தில் வடகிழக்குப் பருவமழை தென்னிந்தியாவின் தென்பகுதிகளில் தொடங்குவதற்கான சாதகமான நிலை காணப்படுகிறது.

மேலும், மத்திய கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 4.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

குமரிக்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து ஒடிசா கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை, மன்னார் வளைகுடா மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் வழியாக சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இவை காரணமாக தமிழ்நாட்டில் இன்று (அக்.15) நீலகிரி, கோவை, தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இதர மாவட்டங்களான கடலூர், தென்காசி, கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, சேலம், திருச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில கனமழையும் பெய்யக் கூடும். இதர தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

16ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, ராமநாதபுரம், சிவகங்கை, திருச்சி, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, கடலூர மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

17ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், மதுரை, திருப்பூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, டெல்டா மாவட்டங்கள், கடலூர், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும் பெய்யக் கூடும். 18ம் தேதி நீலகிரி, கோவை மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரையில் 5 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன், விருதுநகர், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, நாகப்பட்டினம் மாவட்டம் திருப்பூண்டியில் தலா 4 செமீ, புதுச்சேரி, தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர், கன்னியாகுமரி மாவட்டம் பாலமோரில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; வெளிமார்க்கெட்ல அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கறதப் பற்றி தி.மு.க.தான் தேவையில்லாமல் விமர்சனம் செய்யுதுன்னு 'கலக்சன்' குமார் பேசி இருக்கிறாரே... எல்லா கட்சிகளும் தானே கண்டிச்சிருக்கு.

பட்டணம் : **ஆமாமய்யா; எல்லா கட்சிகள் மட்டுமல்ல; த.வெ.க. கூட THIS IS NOT ACCEPTABLE'ன்னு பதிவிட்டுவிட்டு, முன்கூட்டியே மின்தட்டுப் பாட்டை கணித்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமான்னு அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சமூக வலைதளப் பதிவில் கேட்டிருந்ததா ஞாபகம்!**



தாம்பரம் மாநகராட்சி ஆணையாளராக பொறுப்பேற்று கொண்ட ரா.சரண்யா அவர்களை தாம்பரம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமல கண்ணன் தலைமையில் மண்டலக் குழுத் தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, சு.இந்திரன், ச.ஜெயபிரதீப் ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நிலக்கோட்டை ஆ. முனியாண்டி

அக்டோபர் 15 (1992)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நிலக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள தனது சொந்த ஊரான விளாம்பட்டியில் கழகக் கிளையை துவக்கி, அப்பகுதி முழுவதும் கழகத்தை வளர்த்தவர்.

திண்டுக்கல் மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1962–ல் நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்திலும், 1963–ல் மதுரையில் இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு 2 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்.

நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கரு. செயல்மணி

அக்டோபர் 15 (2014)



1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.

"1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்" என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி" எனவும்;

இரங்கல் செய்தியில் "இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன்?" என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.